செ.வெ.எண்.191 நாள்.20.03.2018.

திருநெல்வேலி, பேட்டை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதிகளில் தங்கி பயிலும் 10, 12ம் வகுப்பு மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி, பேட்டை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, திருநெல்வேலி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை மற்றும் கல்வித் துறை இணைந்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதிகளில் தங்கி பயிலும் 10, 12ம் வகுப்பு மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி இன்று (20.03.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதிகளில் தங்கி பயிலும்10, 12ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியில், அடுத்து உயர்கல்வி குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவ, மாணவிகள் தங்களுக்கு சரியான குறிக்கோளை தேர்வு செய்து உயர்கல்வியில் எவ்வகையான கல்வியை தேர்வு செய்து படிக்கலாம் என்பது குறித்து, உங்களுக்கு தெரியாத பல விஷயங்களை தெரிய வைக்க இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. மேலும், கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தொழில் வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி பயில தேவையான ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்தும் இங்கு தெரிவிக்கப்படும். உயர்கல்வியாக என்ன படிக்கலாம், அதிக வேலைவாய்ப்புகள் எவை என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் நிகழ்ச்சி, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள உங்களது பெற்றோர்களின் சிரமங்களை போக்கும் வகையில் நீங்கள் உயர்ந்த நிலையினை அடைந்திட இந்நிகழ்ச்சி வழிவகுக்கும். சரியான வழிகாட்டியாக இது அமையும். இப்பயிற்சியை சிறந்த முறையில் தெரிந்து கொண்டு, நீங்கள் என்ன படிக்க வேண்டும் என்பதை முடிவு செய்து, உங்களுக்கு விருப்பமான பாடத்தினை தேர்வு செய்திட வேண்டும். படிப்புடன் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். சமுதாய நிகழ்வுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். புத்தகங்கள் மற்றும் நாளிதழ்களை தினமும் படித்து, உங்களது அறிவுத்திறனை வளர்த்து, உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.மகேஸ்வரன், இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர்.சுனிதா, ஆங்கிலத் துறை தலைவர் முனைவர். சுவர்ணலதா ஜோசப், டைம் இன்ஸ்டியூட் இயக்குநர் திரு.மாரியப்பன் மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.